**OS No.42/2020**
DW 1 - கோட்டைமுத்து

நாள் 13.11.2025

**பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் PUC வரை படித்துள்ளேன். எனக்கு நன்றாக எழுதப்படிக்கத் தெரியும் என்றால் சரிதான். வாதி சந்திரா என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்குத் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லித்தான் எழுதப்பட்டது. அதில் உள்ள விபரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியும்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். நான் சிறுவயதில் ஆதனூர் கிராமத்தில் இருந்தேன். எனக்கு 1972 ம் ஆண்டில் திருமணம் நடந்தது.

1972 ம் ஆண்டிற்கு முன்பு நான் ஆதனூரில் தான் இருந்தேன். எனக்கு 20 வயதில் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்பு தான் நான் மும்பையில் வசித்தேன். நான் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்ற கட்சியில் வார்டு கவுன்சிலராக பணியாற்றினேன் என்றால் பணியாற்றினேன் தற்போது இல்லை. அதன் அடிப்படையில் நான் அரசு அலுவலகத்திற்கு சென்று வருவேன் என்றால் பேரூராட்சிக்கு சென்று வருவேன்.

நான் வார்டு கவுன்சிலராக இருந்ததால் அரசு ஆவணங்களைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். தாவா வழக்கு சொத்து ஆதியில் கோட்டைசாமி தேவருக்கு பாத்தியப்பட்டது அவரிடம் இருந்து என் தகப்பனார் கிரயம் பெற்றார். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா வழக்கு சொத்துக்கள் உள்பட 2 ஏக்கர் 75 செண்டையும் நாங்கள் வீடு கட்டிய பகுதி போக மீதம் உள்ள பகுதிகளை பல்வேறு பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் சரிதான்.

விற்பனை செய்து வாங்கிய நபர்களுக்கு பாதை ஒதுக்கித்தான் விற்பனை செய்தேன் என்றால் சுல்தான்பீவியைத் தவித்து

மற்றவர்களுக்கு பாதை ஒதுக்கித்தான் விற்பனை செய்தேன். ஏன் அவருக்கு பாதை ஒதுக்கவில்லை என்று கேட்டால் ரயில்வே பணியாளர் என்பதால் அவருக்கு ஒரு ஓரத்தில் விற்பனை செய்தோம் மற்ற நபர்களுக்கு பாதை ஒதுக்கி விற்பனை செய்தோம்.

சுல்தான்பீவி எந்த பாதையில் போனார் என்றால் முன்னாடி ரயில்வே பாதையில் சென்றார் அதற்கு பின்பு நாங்கள் எங்கள் இடத்தில் பாதை ஒதுக்கி கொடுத்தோம் அதில் சென்றார். தென்வடல் பாதையாக பயன்படுத்திக்கொண்டார்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தென்வடல் பாதை 15 அடி பொது பாதை உள்ளதா என்றால் உள்ளது. அதே போல் எனது வீட்டிற்கும் வடக்கே கிழமேலாக 20 அடி பொது பாதை உள்ளதா என்றால் 15 பொதுப்பாதை தான் உள்ளது.

வாதி சந்திரா வீட்டிற்கு தெற்கே சந்திராவிற்குப் பாத்தியப்பட்ட காலி இடம் உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு அடுத்து ரயில்வே இடம் உள்ளது. ரயில்வே காம்பவுணட் சுவர் எழுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். வாதி சந்திராவின் வீட்டின் ரயில்வே காம்பவுண்ட் வரை தென்வடல் பொதுப்பாதை 15 அடி செல்கிறதா என்றால் இல்லை.

நான் எதிர்வாதம் செய்து வரும் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 503/2 காலி இடமாகத் தான் உள்ளது என்றால் சரிதான். அதற்கு கிழக்கே கிருஷ்ணனின் வீடு உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணனின் வீட்டிற்கு தெற்கே புல எண் 503/2 பாத்தியப்பட்ட காலி இடம் உள்ளதா என்றால் உள்ளது.

கிருஷ்ணனின் வீட்டிற்கு கிழக்கே புல எண் 503/2 ல் என் வீடு உள்ளதா என்றால் உள்ளது. உங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் இருந்து புல எண் 503/2 க்கு வரலாம் என்றால் சரிதான். பொதுப்பாதையில் நானும், கிருஷ்ணனும் 4 அடி ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை.

நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பக்கம் 6 ல் 21.05.1961 ம் தேதிய கிரயப் பத்திரத்தின் அடிப்படையில் கிரயம் பெற்ற சுல்தான் பீவி

என்பவர் சாந்தாமணி என்பவருக்கு கடந்த 08.07.1974 ம் தேதியில் ஆவண எண் 1040/1974 என்ற எண்ணில் கிரயம் செய்து கொடுத்துள்ளார் மேற்படி ஆவணத்தில் நான்குமாலில் கிருஷ்ணன் வீட்டிற்கும் முத்துராஜாதேவர் காலி இடத்திற்கும் 15 அடி அகல பொதுப்பாதைக்கு மேற்கு என குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அதே போல் என் நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் 3 பத்தி 6 ல் மேற்படி 21.05.1962 ம் தேதிய கிரய பத்திரத்தின் அடிப்படையில் கிரயம் பெற்ற சுல்தான் பீவி என்பவர் சாந்தாமணி என்பவருக்கு கடந்த 08.07.1974 ம் தேதியில் ஆவண எண் 1040/1974 என்ற எண்ணில் கிரயம் செய்து கொடுத்துள்ளார் மேற்படி ஆவணத்தில் நான்குமாலில் கிருஷ்ணன் வீட்டிற்கும் முத்துராஜாதேவர் காலி இடத்திற்கும் 15 அடி அகல பொதுப்பாதைக்கு மேற்கு என குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அதே போல் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பக்கம் 4 ல் பத்தி 8 ல் முந்தைய ஆவணங்களில் எல்லாம் எனது தந்தை முத்துராஜாதேவர் காலிமனைக்கும் 15 அடி அகல பொதுப்பாதைக்கும் மேற்கு என்று தான் நான்குமால் கண்டு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 3 ஆவண எண் 1040/1974 ல் கண்டுள்ள பத்திரத்தில் சொத்து விபரத்தில் காலிமுத்தன் கிரயம் பெற்றிருக்கும் கிரய புஞ்சைக்கும் கிழக்கு ரயில்வே இடத்திற்கும் வடக்கு, கிருஷ்ணன் வீட்டிற்கும் முத்துராஜாதேவர் காலி இடத்திற்கும் 15 அடி அகல பொதுப்பாதைக்கும் மேற்கு சங்கரன் வீட்டிற்கும் தெற்கு இதற்குள்ளான கிழமேல் ஜாதியடி தென்புறம் 33 வடபுறம் 41 தென்வடல் ஜாதியடி 37 என்று கண்டு பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ** 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என் வீட்டிற்கும் வடக்கே செல்லக்கூடிய பாதை 20 அடி பாதை என்றால் சரியல்ல. ஆவண எண் 3074/2015 என்ற ஆவணத்தில் என் சகோதரர் ராமசந்திரன் எனக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொத்து விபரத்தில் சிவகங்கை ரீடி மானாமதுரை சப்டி , மானாமதுரை

தாலுக்கா, மானாமதுரை டவுன் மேல்கரை, 5 வது வார்டு, புதிய வார்டு எண் 12, ரயில்வே காலனி சமீபம் சோமசுந்தர காலனி, 20 அடி கிழமேல் ஓடிய பொதுப்பாதைக்கும் தெற்கு, கே.நாராயணமூர்த்தி வீட்டிற்கும் காலி இடத்திற்கும் கே.நாராயணமூர்த்திக்கும் எனக்கும் பொதுப்பாத்தியமான பொது சுவருக்கும் மேற்கு போஸ் வீடுகளுக்கும் வடக்கு தங்களுக்கு பாத்தியமான வீட்டிற்கும் காலி இடத்திற்கும் கிழக்கு என்று நான்குமால் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி ஆவணம் **வா.சா.ஆ** 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

21.10.2021 ம் தேதி நான் என் சகோதர, சகோதரிகளிடமிருந்து விடுதலைப்பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் அந்த விடுதலைப் பத்திரத்தில் சொத்து விபரத்தில் சிவகங்கை ரீடி மானாமதுரை சப்டி , மானாமதுரை தாலுக்கா, மானாமதுரை டவுன் மேல்கரை, 5 வது வார்டு, புதிய வார்டு எண் 12, ரயில்வே காலனி சமீபம் சோமசுந்தர காலனி, எழுதி வாங்கிய பத்திரத்தில் நான்குமாலில் வடக்கே கிழமேல் வீதி, கிழக்கே சோமசுந்தரம் மனைவி ரெத்தினமாலாவீடு, தெற்கே ரயில்வே காம்பவுண்ட் சுவர் மேற்கே குருசாமி மனைவி சந்திரா என எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அது வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எனக்கு என் சகோதரர் எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட நான்குமால் படி நான் வாங்கிய விடுதலைப் பத்திரத்தில் வடக்கு பக்கம் செல்லக்கூடிய 20 அடி கிழமேல் பொதுப்பாதையை மறைத்து நான் எழுதிக்கொண்ட விடுதலைப் பத்திரத்தில் வடக்கு பக்கம் 20 அடி பாதையை மறைத்து கிழமேல் வீதி என மோசடியாக பத்திரம் எழுதியுள்ளேன் என்றால் தவறு. பத்திர எழுத்தர் தவறுதலாக எழுதிவிட்டார். வாதி பயன்படுத்திய பொதுப்பதையை ஆக்கிரமிப்பு செய்ய தவறுதலாக எழுதிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

ஆணையாளர் தாவா சொத்தை பார்வையிடும் சமயத்தில் நான் அங்கிருந்தேன் என்றால் சரிதான் ஆணையாளர் தாக்கல் செய்துள்ள இடத்தின் வரைபடம் மற்றும் அறிக்கையை நான் பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் AFED ஆகிய பகுதிகள் வாதிக்கு பாத்தியப்பட்ட காலிஇடம் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த காலிஇடத்திற்கு செல்ல பாதை இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது வீட்டுடன் சேர்ந்த இடம் கொல்லையாகும். அதற்கு எவ்வாறு பாதை கேட்க முடியும். நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் சந்திரா காலிஇடத்திற்கு செல்ல பாதை இல்லை என்று சொல்லியுள்ளார்கள் என்றால் அந்த காலி இடம் சந்திராவின் வீட்டுடன் சேர்ந்த கொல்லையாகும்.

வாதியுடைய வீட்டிற்கு செல்லக்கூடிய தென்வடல் பொதுப்பாதையை வாதி பெண்பாலர் என்பதால் அபகரித்துக்கொண்டுவிட்டீர்கள் என்றால் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு தெற்கே தனிநபர் வீடு கிடையாது என்றால் சரிதான். ஆனால் ரயில்வே இடம் உள்ளது. தெற்கே உள்ள ரயில்வே காம்பவுண்ட் சுவரை உடைத்து இன்று வரையில் மக்கள் சென்று வருகிறார்கள் என்றால் யாரோ சில விசமிகள் பாதையை காட்ட வேண்டும் என்று சுவரை உடைத்து பாதையாக காண்பித்துள்ளார்கள். மக்கள் அந்த வழியாக பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

அந்த பாதையை உடைத்த விசமிகள் மீது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை நான் புகார் கொடுக்கவில்லை. உண்மையில் அது அரசுக்கு பாத்தியப்பட்ட பாதை என்பதால் தான் மத்திய அரசுக்கு பாத்தியப்பட்ட ரயில்வே நிர்வாகம் பாதையாக பயன்படுத்தி வருகிறது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள கிழமேல் செல்லக்கூடிய பாதை 15 அடி பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு அது 20 அடி பாதை என்றால் சரியல்ல, அது 17.4 அடி ஆகும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையில் தென்வடல் 15 அடி பாதைக்கும் மேற்கு என்று நான்குமால் என்று தான் இந்த வாதியின் முன்னோர்களுக்கு கிரயம் கொடுத்துள்ளதை ஒப்புக்கொண்டுள்ள காரணத்தினால் இந்த வாதி கிரயம் பெற்றிருக்கும் கிரய பத்திரத்தின் அடிப்படையில் இந்த வாதிக்கு தென்வடல் செல்லக்கூடிய 15 அடி பொதுப்பாதையை நீங்கள் ஆக்கிரமிப்பு செய்ய எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

வாதி தென்வடல் செல்லக்கூடிய 15 அடி பாதையும்

பொதுப்பாதையாக பயன்படுத்துவதில் நீங்கள் தடை செய்வதற்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**-Sd-**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**
**District Munsif,**
**Manamadurai.**